**தலைப்பு 288 – நில அளவையாளர் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 288 – நில அளவையாளர் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் நில அளவையாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யுலை 01 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நில அளவையாளர் திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி கொள்கை சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவின் பிரகாரம் ஏதாவது சேவைகளுக்காக அறவிடப்படுகின்ற கட்டணம் காலரீதியாக திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும் தியதலாவ நில அளவை மற்றும் படம் வரைதல் நிறுவனத்தின் 75 வீடுகளில் 59 வீடுகள் 2007 ஆம் ஆண்டில் தீர்மானிக்கப்பட்ட விலைகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.<br>அச்சுற்றறிக்கையின் 07 ஆம் பிரிவின் பிரகாரம் அரையாண்டு வருமான அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | இவை மிகவும் பழையானதைப் போல ஆகக் குறைந்த வசதிகளைக் கொண்ட கட்டிடங்கள் என தயவாக தெரிவிக்கிறேன். அதற்கிணங்க உரிய மதிப்பீட்டு வாடகையை திருத்தம் செய்து தருமாறு வேண்டி 2024 பெப்ரவரி 09 ஆந் திகதி பதுளை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு ஒரு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்த்ில் வீட்டு வாடகையை திருத்தம் செய்வதற்குத் தேவையான ஆலோசனை வழங்கப்பட்டது. அரையாண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை என ஏற்றுக்கொள்கிறேன். 2024 ஆம் ஆண்டின் போது முறைப்படியாக படிவம் இலக்கம் 02 இன் பிரகாரம் | கட்டணம் கால ரீதியாக திருத்தம் செய்யப்பட வேண்டியதுடன் வருமான அறிக்கையும் காலரீதியாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | செயலாற்றல் அறிக்கையிடப்படவேண்டுமென உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. | |

**2.2 செலவு முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டு மதிப்பீட்டின் மூலம் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த ரூபா 300,000,000 மொதம்த தொகையான 02 செலவு விடயங்களின் நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. | ஒருங்கிணைந்த காணி தகவல் முறைமையை தயாரிப்பதற்காக உள்நாட்டு நிதியிலிருந்து ரூபா 20,000,000 தொகையும் வெளிநாட்டு நிதியிலிருந்து ரூபா 280,000,000 தொகையுமாக மொத்தமாக ரூபா 300,000,000 தொகையான நிதி ஏற்பாடு செயற்திட்டத்தின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாதனால் செலவு செய்ய முடியாது சேமிப்பாக காணப்பட்டது. | நிதி ஏற்பாட்டினை வேண்டும் போது ஆண்டிற்குள் நிறைவேற்றக்கூடிய நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மட்டுப்படுத்துதல் வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமற்ற சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு** | **பெறுமதி** | **இணக்கமின்மை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|---|
| | **ரூபா** | | | |
| (அ) இலங்கை சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நி.ப. 104(3) மற்றும் 104(4) | - | ஒரு முழுமையான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு ஏழு நாட்களுக்கு மேற்பட்ட தாமதம் ஏற்படும் என தெரிவிக்கப்படுமாக விருந்தால் தொடக்க அறிக்கையினை உடனடியாகஅனுப்பிவைக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்த அறிக்கையினைச் சமர்ப்பிப்பதற்கு 04 சந்தர்ப்பங்களின் போது 45 நாட்களுக்கும் 66 நாட்களுக்கும் இடைப்பட்ட வீச்சுடைய கால தாமதம் ஏற்பட்டிருந்தது. பரீட்சித்ததன் பின்னர் நட்டம் ஏற்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தும் அந்த அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு 04 சந்தர்ப்பங்களின் போது 08 நாட்களுக்கும் 86 நாட்களுக்கும் இடைப்பட்ட வீச்சுடைய காலம் எடுத்திருந்தது. | நிறுவன கட்டமைப்பின் பிரகாரம் தலைமை அலுவலகம், மாகாண அலுவலகம், மாவட்ட நில அளவையாளர் அலுவலகம் மற்றும் பிராந்திய நில அளவையாளர் அலுவலகங்கள் 04 அடுக்குகளினூடாக அமுல்ப்படுத்தப்பட்டு ஆளணியினர்களின் மூலம் உரிய செயற்பாடுகளை முகாமைத்துவம் செய்ய வேண்டி ஏற்படுவதன் காரணமாக நடைமுறையில் தாமதம் ஏற்படுகின்றது. | தொடர்புபட்ட அறிக்கையை உரிய நேரத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை | 4,489,849 | சுற்றறிக்கைக்கு முரணாக செயற்பட்டதனால் திணைக்களத்தின் சேவையை கைவிட்டுச் சென்றுள்ள 93 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா | சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய கடன் மீதியினை அறவீடு செய்வதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| யின் 3.1 ஆம் பந்தியின் மூலம் திருத்தப்பட்ட நி.பி. 113(6)(ஆ) | 4,489,849 தொகையை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்ததுடன் அவற்றில் ரூபா 1,183,086 அல்லது 26 சதவீதம் 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கால வீச்சினைக் கொண்டவையாகும். |

## 2.4 வரித் தேவைப்பாடுகளுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வு பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்ட வரித் தேவைப்பாடுகளுடன் இணக்கமற்ற வகையில் செயற்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி (திருத்திய) அதிகாரச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் வரிக் காலப்பகுதிக்காக நிர்ணயிக்கப்பட்ட திகதியின் போது பெறுமதி சேர் வரி அறிக்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் தாமத காலம் 03 மாதங்களிலிருந்து 03 நாட்கள் வரையிலான காலவீச்சுடையதாகும். 2023 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டிற்கான அறிக்கையானது 2024 மே 20 ஆந் திகதி வரையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2023 ஆம் ஆண்டில் மாகாண அலுவலகத்தின் மூலம் பெறுமதி சேர் வரி அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளும் போது இடம்பெற்ற தாமதங்களும் அவற்றின் பிழைகளை சரிசெய்யும் போதும் மீண்டும் தயாரிக்கும் போதும் ஏற்பட்ட சிக்கலினாலுமாகும். எதிர்காலத்தில் அறிக்கைகளை துரிதமாகப் பெற்று நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் வரி அறிக்கையை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை இடம்பெறுகின்றது என தயவாக தெரிவிக்கிறேன். | நிர்ணயிக்கப்பட்ட திகதியில் வரி அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஆ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி (2006 இன் 8 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்டது) அதிகாரச் | மாதாந்த பெறுமதி சேர் வரிப் பணம் பெற்றுக்கொள்ளலினை ஒரு கணக்கினூடாக கணக்கீடு செய்தலினால் (Online Payment Gateway) ஒப்பீடு | வரி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சட்டத்தின் 26 ஆம் பிரிவின் பிரகாரம் ஏதாவது வரியினை அறவிடக் கூடிய காலப்பகுதி சம்பந்தமான வரியானது அந்த வரியினை அறவிடக்கூடிய காலப்பகுதியின் இறுதியின் பின்னர் வருகின்ற மாதத்தின் இருபதாந் திகதிக்கு பிந்திய திகதியல்லாத திகதியில் செலுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தும் ரூபா 16,626,594 தொகையான பெறுமதி சேர் வரியானது 02 நாட்களுக்கும் 26 நாட்களுக்கும் இடைப்பட்ட கால தாமதத்தின் பின்னர் செலுத்தப்பட்டிருந்தது. | செய்யும் சிக்கலின் காரணமாக தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் தாமதமடைந்துள்ளதனால் எதிர்காலத்தில் அதற்காக மாகாண ரீதியாக தனித்தனியாக கணக்குகளை ஆரம்பித்து கணக்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதனால் இச்சிக்கலினை எதிர்காலத்தில் தீர்த்துகைத்துக்கொள்ளலாம் என தயவாக தெரிவிக்கிறேன். | |
| (இ) | 2023 முதலாவது காலாண்டின் பெறுமதி சேர் வரி அறிக்கையின் பிரகாரம் உள்நாட்டு வருமானவரித் திணைக்களத்திற்கு ரூபா 9,148,168 செலுத்த வேண்டியதாக இருந்த போதிலும் முதலாம் காலாண்டிற்காக ரூபா 9,258,513 செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க ரூபா 110,345 மிகையாகச் செலுத்தப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது. | 2023 முதலாவது காலாண்டில் பெறுமதி சேர் வரி அறிக்கை தொடர்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்க அனுப்பிவைக்கப்பட்டுள்ள பெறுமதியில் வித்தியாசம் உள்ளது என ஏற்றுக்கொள்கிறேன். இது தொடர்பாக கலந்துரையாடி மிகையாக அனுப்பிய பெறுமதியை அடுத்துவரும் மாதத்தின் போது பெறுமதி செர் வரிக்காக செலுத்த வேண்டிய பெறுமதியிலிருந்து எதிரீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவாக தெரிவிக்கிறேன். | வரியை சரியாக கணிப்பிட்டு அனுப்பிவைத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 துாரநோக்கும் செயற்பணியும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திணைக்களத்தின் நில அளவையாளர்கள் பல்வேறு நில அளவை வகைகளை மேற்கொள்வதுடன் அவற்றில் எல்லைக் கல் பதித்து நியதிச்சட்ட ரீதியான காரணத்தின் அடிப்படையில் மேற்கொள்கின்ற நில அளவைகளுக்கான மாதாந்த இலக்கு 20 காணி அலகுகளாக இருந்ததுடன் காணித்துண்டுகளாயின் 30 துண்டுகளாக 16 ஆண்டுகளுக்கு முன்னர் தோற்றுவிக்கப்பட்ட விதி முறையையானது (Norms) நில அளவைகளின் நுட்ப ரீதியான மற்றும் உபகரணங்களின் தொழில்நுட்ப ரீதியான மேம்பாட்டுடன் நிகழ்காலத்திற்கு பொருந்தும் வகையில் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | மாதாந்த வேலை அளவு மீளாய்வு செய்யப்பட்டு திருத்தம் செய்ததன் பின்னர் அறிக்கையானது காணி அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தினைப் பெற்றதன் பின்னர் உரிய மாதாந்த அளவினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விதி முறையானது (Norms) நில அளவை நுட்ப முறைமை மற்றும் உபகரணங்களின் தொழில் நுட்ப ரீதியான மேம்பாட்டுடன் நிகழ்காலத்திற்குப் பொருந்தும் வகையில் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். |

### 3.2 கடமைகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) முன்னைய ஆண்டுகளிலிருந்து 2023 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 08 நில அளவை வகைகளின் கீழ் கிடைத்துள்ள முழு நில அளவை வேண்டுதல்களின் எண்ணிக்கை 129,270 களில் பூர்த்திசெய்த எண்ணிக்கை 95,933 ஆக இருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறு பூர்த்திசெய்யாத எண்ணிக்கை 33,337 அல்லது 26 சதவீதமாகும். அந்த நில அளவை வேண்டுதல்களுக்கு மத்தியில் 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நில அளவை வேண்தல் 8,688 ஆகவும் 03 வேண்டுதல்களுக்கு மேற்பட்ட நில அளவை வேண்டுதல் 3,834 ஆகவும் 02 ஆண்டுகளுக்கு | பூர்த்திசெய்யாத நில அளவை வேண்டுதலின் எண்ணிக்கையான 33,337 ஆனது அவ்வப்போது அதிகரித்துச் செல்கின்றது. வேண்டுதல் கிடைக்கின்ற வேகத்தின் அடிப்படையில் நிலத்தில் உருவாகின்ற காணிப் பிரச்சினைகளின் தன்மைகளின் அடிப்படையில் மற்றும் துறையில் செயற்படுகின்ற அரசாங்க நில அளவையாளர்களின் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையினால் செயற்படுத்தப்படாத நில அளவை வேண்டுதல்களின் | நில அளவை வேண்டுதல்களை நிறைவேற்றும் செயற்திறனை அதிகரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்பட்ட நில அளவை வேண்டுதல் 4,712 ஆகவும் 01 ஆண்டிற்கு மேற்பட்ட நிலஅளவை வேண்டுதல் 6,276 ஆகவும் இருந்தது. | எண்ணிக்கை அதிகரித்தல் இடம்பெறுகின்றது. | |

(ஆ) கொழும்பு மாவட்ட அலுவலகம்

| | | | |
|---|---|---|---|
| (i) | கொழும்பு மாவட்ட அலுவலகம் தொடர்பான நில அளவை வேண்டுதல் தகவல் முகாமைத்துவ முறைமை (SRIMS) மற்றும் நில அளவை கட்டண பதிவேட்டினைப் பரீட்சித்த போது 16 நிறுவனங்களிடமிருந்து நில அளவை நடவடிக்கைகளுக்கான கட்டணமாக ரூபா 1,187,085 அறவிடப்பட்டு 2020 ஆம் ஆண்டிலிருந்து 2023 திசெம்பர் 31 வரை 195 நாட்களிலிருந்து 1338 நாட்கள் வரையான வீச்சுடைய காலம் கடந்திருந்தும் உரிய நில அளவை நடவடிக்கைகள் பூர்ணப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | ரூபா 1,187,085 தொகைக்கான 16 வேண்டுதல்களில் இலக்கம் குறிப்பிடப்படாதிருந்ததனா ல் தனியாக எந்த வேண்டுதல் என அடையாளம் காணமுடியாதுள்ளது. நில அளவை வேண்டுதல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் மாத்திரம் கட்டணம் கணிப்பிடப்பட்டுள்ளது. வெளிக்கள வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் களத்தில் ஏற்படுகின்ற எல்லைப் பிரச்சினை மற்றும் பல்வேறுபட்ட பிணைகளுக்கு இணங்க காலம் எடுப்பதற்கான வாய்ப்பு காணப்படுகின்றது. நாட்டில் காணப்படுகின்ற அதிக முக்கியத்துவமான மற்றும் முன்னுரனிமை வழங்கப்பட வேண்டிய செயற்பாடுகளை முதலில் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளதனால் குறைந்த முன்னுரிமையுடன் வேண்டுதல்களை அமுல்ப்படுத்துவதற்கு சில காலம் எடுக்கின்றது. | கிடைக்கின்ற நில அளவை வேண்டுதல்களை முன்னுரிமைக்கு இணங்க துரிதமாக நிறைவேற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நில அளவை வேண்டுதல்களானது தகவல் முறைமையில் குறிப்பிடப்பட்டிருந்த 05 வேண்டுதல்கள் தொடர்பாக ஒரு நில அளவையாளருக்கு ஒப்படைப்பதற்காக 66 நாட்களிலிருந்து 490 நாட்கள் வரையான காலதாமதம் ஏற்பட்டிருந்தது. | நில அளவை வேண்டுதல்களுக்கு இலக்கம் ஈடுபடுத்தப்பட்டு தகவல் முகாமைத்துவ தரவு முறைமையில் உள்ளடக்கப்பட்டு உரிய அலுவலகத்திற்கு வழங்கப்படுகின்றது. நீதிமன்ற நில அளவை வேண்டுதல் போன்ற உயர்ந்த முன்னுரிமை தேவைப்படுகின்ற நில அளவை வேண்டுதல்களுக்காக முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதனால் இந்த நில அளவை வேண்டுதல் தாமதமடைதல் ஏற்படுகின்றது. எனவே பிராந்திய நில அளவையாளர் அலுவலகத்திற்கு மாவட்ட நில அளவையாளர் அலுவலகத்திடமிருந்து நில அளவை வேண்டுதல்கள் கிடைத்திருந்தும் அரசாங்க நில அளவையாளர்களுக்கு வழங்குவதற்கு காலம் எடுக்கின்றது. அது உரிய நில அளவை வேண்டுதல்களின் முன்னுரிமை அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. | நில அளவை வேண்டுதல்களை நிறைவேற்றும் காலம் மற்றும் செயல்முன்னேற்றம் பரீட்சிக்கப்படுதல் வேண்டும். |
| (iii) | 2022 மார்ச் மாதம் 29 ஆந் திகதி திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள 10 பாடசாலைகளின் காணிகளை நில அளவை செய்வதற்கான வேண்டுதல் கிடைத்துள்ளதுடன் அதற்கிணங்க புனித மெதிவ் | மாவட்ட நில அளவையாளர் அலுவலகத்திற்குரிய நில அளவை வேண்டுதல்களின் வெளிக்கள செயற்பாடுகள் மாவட்டத்திலுள்ள நில அளவையாளர்களால் நிறைவேற்றப்படுகின்ற சந்தர்ப்பத்தில் முன்னுரிமை | நில அளவை வேண்டுதல் தாமதமின்றி நிறைவேற்றப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வித்தியாலயத்தின் காணியின் நில அளவை வேலைகளை முடிவுறுத்தி உரிய திட்ட வரைபடம் 2023 ஏப்ரல் 19 ஆந் திகதி வலய கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க நில அளவை வேண்டுதல் விடுக்கப்பட்ட திகதியிலிருந்து 386 நாட்கள் அல்லது ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட கால தாமதத்தில் நில அளவை வேண்டுதல் முடிவுறுத்தப்பட்டிருந்தது. | வழங்கப்படுகின்ற நில அளவை செயற்பாடுகள் விசேட நில அளவை பிரிவினூடாக நிறைவேற்றப்படும் சந்தர்ப்பங்கள் உள்ளன. இந்த நில அளவை வேண்டுதல் சம்பந்தமாக பாடசாலை அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளதனால் இதுவும் விசேட நில அளவை பிரிவினூடாக நிறைவேற்றப்பட்டுள்ளது. | |
| (இ) | நில அளவை மற்றும் படம் வரைதல் நிறுவனத்தினால் நில அளவை வெளிக்கள உதவியாளர்களுக்காக நடாத்தப்படுகின்ற தேசிய தொழில்சார் தகமைகளை வழங்கும் (NVQ மட்டம் 2) இற்கான கற்கை நெறிகள் 2023 ஆம் ஆண்டின் போது நடாத்தப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டில் நில அளவை நடவடிக்கைகளுக்கான இரண்டு ஆண்டு டிப்ளோமா கற்கை நெறிக்குரிய அங்கீகாரம் கிடைத்திருக்காததனால் அந்த கற்கை நெறி ஆரம்பிக்கப்படவில்லை. எனினும் வெளிக்கள நில அளவை உதவியாளர்களுக்கு 2022 ஆம் ஆண்டில் சேரத்துக்கொள்ளப்பட்ட தகமைகளுடனான நபர்களுக்காக 2023 ஆம் ஆண்டில் தேசிய தொழில்சார் தகமைகளை வழங்கும் கற்கை நெறி NVQ 2/3 நடாத்தப்பட்டது. | அங்கீகரித்த கற்கைநெறியை முறைப்படியாக நடாத்துதல் வேண்டும். |

## 3.3 வெளிநாட்டு உதவி செயற்திட்டம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| வெளிநாட்டு கடனை எதிர்பார்த்து வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் காணி அமைச்சின் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் கடன் நிதியை | இச்செயற்திட்டத்திற்காக 2021 ஆம் அண்டின் போது செயற்திட்ட அறிக்கையினைத் தயாரித்து | நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்த செயற்பாடுகளுக்காக மாத்திரம் நிதி |

| | | |
|---|---|---|
| பெற்றுக்கொள்வதற்காக கடன் உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு நடவடிக்கை எடுத்து உரிய செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனத் தெரிவித்திருந்தும் 2023 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் முன்னுரிமைச் செயற்பாடாக கடனை மீள் கட்டமைப்புச் செய்யும் செயற்பாட்டின் விளைவாக திணைக்களத்தின் இலங்கை காணிகள் தகவல் சேவை முறைமை செயற்திட்டமானது எந்தவொரு செயல்முன்னேற்றத்தினையும் அடைந்துகொண்டிருக்கவில்லை. இச்செயற்திட்டம் தொடர்பான அடிப்படை செயற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்படாது 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது பாதீட்டின் மூலம் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து செயற்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு ஆயத்தமாக இருந்தும் உரிய வெளிநாட்டு கடன் நிதி அங்கீகரிக்கப்படாததனால் 2023 ஆம் ஆண்டின் போது எந்த செயல் முன்னேற்றமும் இடம்பெற்றிருக்கவில்லை. அவ்வாறே 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் பாதீட்டின் மூலம் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் வெளிநாட்டு கடன் நிதிக்காக அங்கீகாரம் கிடைத்திருக்காததன் காரணமாக இச்செயற்திட்டத்தின் எந்த செயற்பாட்டினையும் மேற்கொள்ள முடியாதுள்ளது என தயவாக தெரிவிக்கிறேன். | ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

### 3.4 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 (அ) பிரிவின் பிரகாரம் பெறுகை செய்யும் நிறுவனத்தினால் பிரதான பெறுகைத் திட்டத்தினை தயாரித்து அதன் 4.2.1 (ஆ) பிரிவின் பிரகாரம் ஆகக் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் காலத்திற்காக எதிர்பார்த்த பெறுகை நடவடிக்கைகளை பெறுகைத் திட்டத்தில் பட்டியலபடுத்தியிருக்க வேண்டிய போதிலும் அவ்வாறான பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | அடுத்துவரும் 03 ஆண்டுகளுக்காக பிரதான பெறுகைத் திட்டத்தினைத் தயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பாதுகாப்புச் சேவை ஒப்பந்தத்தினை வழங்கும் போது 2006 பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.3.6 ஆம் பிரிவின் பிரகாரம் கேள்வியை திறக்கும் நிர்ணயிக்கப்பட்ட படிவத்திற்கு இணங்க அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தினை பூரணப்படுத்தும் போது Yes ஆக பதியப்பட வேண்டிய சந்தர்ப்பத்தில் ‘‘Y’’ ஆகவும் NO ஆக பதியப்பட வேண்டிய சந்தர்ப்பத்தில் ‘‘N’’ ஆகவும் காட்டுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தும் அதற்குப் பதிலாக மற்றும் X ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் அப்படிவத்தினை பூரணப்படுத்தும் போது Yes ஆக பதியப்பட வேண்டிய சந்தர்ப்பத்தில் ‘‘Y’’ ஆகவும் No ஆக பதியப்படவேண்டிய சந்தர்ப்பத்தில் ‘‘N’’ ஆகவும் பதியுமாறு கேள்வி திறக்கும் குழுவிற்கு தெரியப்படுத்தப்பட்டது என தயவாக தெரிவிக்கிறேன். | பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதியற்ற சொத்துக்கள் தொடர்பாக 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் SA-82 படிவத்தில் திசெம்பர் 31 இல் உள்ளவாறான இறுதி மீதியாக காட்டப்பட்டிருந்த பெறுமதியினை விட மிகையாக ரூபா 13,847,422 2023 நிதிக்கூற்றுக்களில் SA-82 படிவத்தில் சனவரி 01 ஆந் தகிதியில் உள்ளவாறான ஆரம்ப மீதியாகக் காட்டப்பட்டிருந்தது. | SA-82 அறிக்கைக்காக தேவையான ஒப்பீட்டு நடவடிக்கை தற்பொழுது மேற்கொள்ளப்படுகின்றது. இறுதிக் கணக்கினைத் தயாரிக்கும் போது ஆரம்ப மீதியாக எடுக்கவேண்டிய சரியான பெறுமதியான ரூபா 10,600,869,259 நிதிரீதியான பெறுமதிக்கு இணங்க 2023 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைமைக்கூற்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு பொருந்தும் வகையில் சரிசெய்தலானது எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் என தயவாக தெரிவிக்கிறேன். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற மீதியானது திறைசேரி அறிக்கைக்கு சமமாக இருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | SA-82 படிவத்தில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியற்ற சொத்துக்களின் மொத்தம் ரூபா 11,088,124,680 ஆக இருந்த போதிலும் அத்திகதியில் உள்ளவாறான நிதி நிலைமை தொடர்பான கூற்றில் பெறுமதி ரூபா 11,074,119,758 ஆக இருந்ததனால் வித்தியாசம் ரூபா 14,004,922 ஆகும். இந்த வித்தியாசத்தினை அடையாளங்கண்டு திறைசேரி ஏடுகளுடன் சரிசெய்யப்பட்டிருக்கவில்லை. | இதில் குறிப்பிட்ட வித்தியாசமான ரூபா 14,004,922 தொகை தலைப்பு 922 இன் கீழ் திறைசேரியினால் கணக்கீடு செய்யப்பட்டதுடன் அவர்களின் கணக்குகளைத் தீர்த்துவைப்பதற்காக இப்பெறுமதி உள்ளடக்கப்பட்டுள்ளது என திறைசேரி கணக்குகள் திணைக்களத்தினை விசாரித்த போது வாய்மொழி மூலம் தெரிவிக்கப்பட்டது. உரிய கணக்கீடு செய்தலானது திறைசேரியினால் செய்யப்பட்டுள்ளது என 2023 ஆம் ஆண்டில் SA-81 அறிக்கையின் மூலம் தெளிவானதாகும். | நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுகின்ற மீதியானது திறைசேரி அறிக்கையுடன் சமமாக இருத்தல் வேண்டும். |
| (இ) | மனைப் பொருட்களும் அலுவலக உபகரணங்களும், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களுக்காக மொத்தமாக ரூபா 9,725,619 செலவு செய்யப்பட்டிரந்தும் SA-82 படிவத்தில் அக்கொள்வனவுகள் ரூபா 8,641,788 ஆகக் காட்டப்பட்டிருந்ததனால் ரூபா 1,083,831 வித்தியாசம் காணப்பட்டது. | உரிய உப அலுவலகத்தின் மூலம் கணக்கீடு செய்யும் போது ஆரம்ப மீதி அதிகரிப்பாக கணக்கீடு செய்யப்பட்டதாக தோன்றுகின்ற போதிலும் அனைத்து கொள்வனவுகளும் சொத்துக்களின் பெறுமதிக்கு சேர்க்கப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுகின்ற மனைப் பொருட்களும் அலுவலக உபகரணங்களும்இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் மீதி திறைசேரி அறிக்கைகளுடன் சமமாக இருத்தல் வேண்டும். |
| (ஈ) | திணைக்களத்தின் தியதலாவ நில அளவை மற்றும் படம் வரைதல் நிறுவனத்தில் அமைந்துள்ள 08 கற்கூடாரங்களும் 07 வீடுகளும் பயன்படுத்தாது காணப்பட்டதுடன் ஒரு வீடு திருத்தம் செய்து பயன்படுத்தும் மட்டத்தில் காணப்பட்டது. | உத்தியோகபூர்வ வீடுகளை வேண்டிக்கொண்ட அனைத்து உத்தியோகத்தர்களும் மாணவர்களும் 2023 திசெம்பர் மாதம் வரை குடியிருப்பதற்காக உத்தியோகபூர்வ | வளங்கள் முறையாக பயன்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வீடுகள் வழங்கப்பட்டிருந்தன. 2023 திசெம்பர் மாதமளவில் 16 உத்தியோகபூர்வ இல்லங்கள் பயன்படுத்தப்படாது காணப்பட்டன. குறுகிய அறிவித்தலில் இடம்பெறுகின்ற ஊழியர்களைச் சேர்த்துக்கொள்ளலின் போது அவர்களின் பயன்பாட்டிற்கு வழங்குவதற்காக இந்த வீடுகள் தற்பொழுது வெற்றிடமாக உள்ளன. 08 வீடுகள் 2024 ஆம் ஆண்டின் போது உத்தியோகத்ரத்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. | |
| (உ) | 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ஏடுகளிலிருந்து பதிவழித்தல் தொடர்பான கூற்றில் பதிவழிக்காது முன்கொண்டு வரப்படுகின்ற மீதியாக 03 விடயங்கள் தொடர்பாக ரூபா 962,275 காட்டப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் அந்த 03 விடயங்கள் தொடர்பாக ஆரம்ப பதிவழிக்கப்படாத மீதியாக ரூபா 1,046,100 காட்டப்பட்டதனால் அந்த மீதி ரூபா 83,825 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | சரியாக தயாரிக்கப்பட்ட அறிக்கை இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் சரியான மீதி காட்டப்படுதல் வேண்டும். |

**3.6 முகாமைத்துவ பலவீனங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 மே 12 ஆந் திகதிய 02/2021 (viii) ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கைக்கு இணங்க | எதிர்காலத்தில் விரல் அடையாளமிடும் இயந்திரத்தினை திருத்தம் செய்ததன் பின்னர் | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஆளணியினர் வருகை மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | வருகை மற்றும் வெளிச்செல்லலினை உறுதிப்படுத்துவதற்காக விரல் அடையாளமிடும் இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்த போதிலும் வெலிமடை பிராந்திய நில அளவையாளர் அலுவலகத்தில் உள்ள விரல் அடையளமிடும் இயந்திரம் 2022 சனவரி 12 ஆந் திகதியிலிருந்து செயற்படாதிருந்ததன் காரணமாக இவ்வறிக்கைத் திகதி வரையும் அந்த இயந்திரம் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. | அல்லது புதிய இயந்திரத்தினை பொருத்தியதன் பின்னர் இச்சிக்கல் தீர்த்துவைக்கப்படும். | விடுமுறைகளைப் பதிவதற்காக விரல் அடையாளமிடும் இயந்திரம் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தின் நில அளவை வேண்டுதல் கிடைத்த திகதியிலிருந்து அதன் வேலைகைள் முடிவடையும் வரை முழுமையான கட்டங்கள் தொடர்பான விபரம் ஒரே தடவையில் நில அளவை வேண்டுதல் தகவல் முகாமைத்துவ முறைமையினூடாக (SRIMS) வழங்குவதற்காக முறைமையில் சில இடைமுகப்புகளுக்குள் (Interfaces) சென்று சிக்கலான நடைமுறைகளின் மூலம் தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. | நில அளவை வேண்டுதல்களின் தற்போதைய நிலைமையானது Requisition Status Searcher இனூடாக ஒரே தடவையில் பெற்றுக்கொள்ளலாம். எவ்வாறாயினும் இன்னும் தேவையான தவல்களை அதற்குள் உட்படுத்துவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. | முகாமைத்துவத்திற்கு த் தேவையான அனைத்து தகவல்களையும் பெற்றுக்கொள்ளக்கூடி ய வகையில் நில அளவை வேண்டுதல் தகவல் முகாமைத்துவ முறைமை தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | நில அளவையாளர்கள் சேவைக் குறிப்பின் பிரகாரம் திணைக்களத்திற்கு பயிற்சி நில அளவையாளர்களைச் சேர்த்துக்கொள்ளும் போது காணப்படுகின்ற வெற்றிடங்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட தகமைகளுடன் பட்டதாரிகள் 90 சதவீதம் திறந்த போட்டிப் பரீட்சைகளின் மூலமும் தொழில்நுட்ப உத்தியோத்தர்களின் திறமைகளை அடிப்படையாகக் | காணப்படுகின்ற சேவைக் குறிப்பு மற்றும் உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களின் அளவிற்கு இணங்க அரசாங்கத்தின் மூலம் காலத்திற்கு காலம் எடுக்கப்படுகின்ற கொள்கைரீதியான தீர்மானத்தின் கீழ் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் சில ஆண்டுகளின் போது | வளங்களை உச்ச அளவில் பயன்படுத:தும் வகையில் கற்கை நெறிகள் திட்டமிடப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொண்டு மிகுதியான 10 சதவீதத்தினையும் சேர்த்துக்கொள்ளல் இடம்பெறுகின்றது. பட்டதாரிகளாக சேர்த்துக் கொள்ளப்படுகின்ற 90 சதவீதத்தில் 9:1 விகிதத்திற்கு நில அளவைக் கல்வி பட்டதாரிகளும் ஏனைய பட்டதாரிகளும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். அவ்வாறு சேர்த்துக்கொள்ளப்படுகின்ற ஏனைய பட்டதாரிகளும் நில அளவை கல்விப் பட்டத்தினைப் பயில்வதற்கு போட்டிப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களில் சிலரும் பட்டக் கற்கைநெறியை பயில்வதற்கு சேர்த்துக்கொள்ளப்பட்டதனால் 2022 இலிருந்து 2026 வரையான 04 ஆண்டுகள் கற்கை நெறிக்காக 22 மாணவர்கள் போன்ற மிகவும் குறைந்த எண்ணிக்கையான மாணவர்களாக இருந்தனர். பயிற்சி நில அளவையாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படாத சந்தர்ப்பத்தில் பட்டக் கற்கை நெறிக்காக மாணவர்கள் இல்லாத நிலைமையும் அவதானிக்கப்பட்டது. | ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கான தேவைப்பாடு காணப்பட்டிருந்தும் ஆட்சேர்ப்புக்களை மேற்கொண்டு பயிற்சிக்காக ஈடுபடுத்துவதற்கான இயலுமை இருக்கவில்லை. காணப்படுகின்ற சேவைக் குறிப்பின் பிரகாரம் இந்த ஆட்வேர்ப்புக்கள் இடம்பெறுவதுடன் அரசாங்கத்தின் மூலம் எடுக்கப்படுகின்ற கொள்கை ரீதியான தீர்மானத்தின் அடிப்படையில் அங்கீகாரம் வழங்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் இந்த பட்டக் கற்கைநெறிக்காக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல் இடம்பெறுகின்றது. | |
| (ஈ) | 2022-2026 பட்டப் படிப்பு குழுவின் உள்ளடக்கமானது 08 ஏனைய பட்டதாரிகளையும் 14 தொழில்நுட்ப உத்தியோகத்தர் உத்தியோகத்தர்களையும் கொண்டிருந்ததுடன் இக்கற்கை நெறிக்ககு தெரிவு செய்யும் போது ஏனைய பட்டதாரிகளின் அளவினைத் தீர்மானிக்கும் நிரந்தரமான ஒரு நடைமுறை இருந்ததுடன் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் போட்டிப் பரீட்சைகளின் மூலம் தெரிவுசெய்யப்படுகின்றார்கள் என 2021 யூலை 02 ஆந் திகதிய 16/2021 ஆம் இலக்க நில அளவையாளர் | விண்ணப்ப பத்திரங்களை கோரும் அறிவித்தலில் உள்ளடக்கப்பட்ட 16/2021 ஆம் இலக்க சுற்றறிக்கை கடித்தின் கீழ் 2021 யூலை 02 ஆந் திகதி தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் 2021 ஆகஸ்ட் 11 ஆந் திகதி விண்ணப்பங்களை கோருதல் முடிவடைந்திருந்தது 2021 ஒக்தோபர் 23 ஆந் திகதி நடைபெற்ற போட்டிப் பரீட்சையின் பிரகாரம் 14 மாணவர்கள் 2022 சனவரி 13 ஆந் திகதி | தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் அளவினைத் தீர்மானிப்பதற்காக நிரந்தரமான ஒரு நடைமுறையினை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்தின் ஆளணி சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தும் அவ்வாறு ஆட்சேர்க்கப்படுகின்ற அளவினைத் தீர்மானிப்பதற்கான ஒரு நிரந்தர நடைமுறை அல்லது எழுத்துமூல சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | நடைபெற்ற போட்டிப் பரீட்சைக்காக அழைக்கப்பட்டு அவர்கள் இந்த கற்கை நெறிக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் என தயவாக தெரிவிக்கிறேன். | |
| (உ) | நில அளவை மற்றும் படம் வரைதல் நிறுவனத்தில் விரிவுரைகளை நடாத்துவதற்காக திணைக்களத்தின் 17 உத்தியோகத்தர்கள் நிரந்தர விரிவுரையாளர்களாக நியமிக்கப்பட்டு அவர்களுக்கான விரிவுரைப் படியானது அவர்களின் நிரந்தர பதிவிக்கான சம்பளத்திற்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. அவர்களில் 15 உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் விரிவுரைப் படிகள் செலுத்தப்பட்டிருந்தும் அவர்களில் சிரேஷ்ட பிரதி உதவி நாயகம் (பயிற்சி) மற்றும் சிரேஷ்ட பிரதி உதவி நாயகம் (கல்வி) ஆகிய இருவரும் கற்கைநெறியை மேற்பார்வை செய்வதனை மேற்கொண்டிருந்தும் எந்த விரிவுரையும் நடாத்தப்படாதிருந்ததுடன் மூன்று விரிவுரையாளர்கள் வகுப்பிற்குப் பொறுப்பானவர்கள் எனக் குறிப்பிட்டு எந்த விரிவுரையும் நடத்தாது படிகளைப் பெற்றுக்கொண்டிருந்தனர். 2023 ஆம் ஆண்டு இந்த மாணவர்களின் இரண்டாம் கல்வி ஆண்டாக இருந்ததுடன் அதற்காக நடாத்தப்பட வேண்டிய விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கை 1950 ஆக இருந்த போதிலும் | நில அளவை மற்றும் படம் வரைதல் நிறுவனத்திற்கு பட்டக் கற்கை நெறிகளை நடாத்துவதற்காக சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற அனைத்து வரிவுரையாளர்கள் மற்றும் அக்கற்கை நெறியை நடாத்துவதற்காக சேவையை வழங்குகின்ற உத்தியோகத்ரத்களுக்கு விரிவுரைப்படியினைப் பெற்றுக்கொள்வதற்காக அரசாங்க நிருவாக மற்றும் உள்நாட்டு விவகார அமைச்சின் தாபன பணிப்பாளர் நாயகத்தின் தா/8/5/719/272/11 ஆம் இலக்க 2007 பெப்ரவரி 13 ஆந் திகதிய கடித்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க BDC கற்கை நெறியை நடாத்துவதற்காக மேற்பார்வை நடவடிக்கை, விரிவுரைகளை நடாத்துதல் மற்றும் கற்கைநெறிகளை செயற்படுத்தும் வகுப்பிற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவுகள் அதற்கிணங்க மேற்கொள்ளப்படுகின்றன. அந்த விரிவுரை கால | விரிவுரைப் படியைப் பெற்றுக்கொள்ளும் அனைத்து நிரந்தர வரியுரையாளர்களுக்கு மாக வரிவுரை மணித்தியாலங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்விற்குச் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் 700 மணித்தியாலங்கள் மாத்திரம் விரிவுரைகள் நடாத்தப்பட்டிருந்தன. | அட்டவணைக்கு வரிவுரைகள் நடத்தப்படாதிருந்த போதிலும் பயிற்றுவிக்கும் காலத்தில் ஆலோசனை ரீதியான விரிவரை வகுப்பறைக்குள் மேற்கொள்ளப்பட்டன. உரிய விரிவுரை மணித்தியாளலங்களின் அளவானது பட்டப்படிபினை வழங்குவதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களின் அளவிற்கு நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் விரிவுரை மற்றும் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்களின் மூலம் பட்டப்படிப்பு பெறுபேறுகளை வழங்கும் போது அது கண்காணிக்கப்படுகின்றது. | |
| (ஊ) | 2022 இலிருந்து 2026 வரையான நான்கு ஆண்டு கற்கைநெறியானது 22 மாணவர்களுக்காக கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் 17 குறுங்கால கற்கை நெறிகள் மற்றும் 51 ஒரு நாள் செயலமர்வு மாத்திரம் 2023 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டது. இந்த நிறுவனம் பல்வேறு கட்டிடங்களின் 121 பகுதிகளை உள்ளடக்கி 61 எக்கர் நிலத்தில் மிகவும் அதிக அளவான பௌதீக வளங்களுடன் அமைந்திருந்தும் அவற்றினை பயன்படுத:ததல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | 2022 இலிருந்து நாட்டில் உருவாகிய சிக்கலான நிலைமையின் அடிப்படையில் அரசாங்கத்தினால் எங்களின் சேவைகளுக்காக சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்படும் உத்தியோகத்தர்களை மட்டுப்படுத்தியதன் காரணமாக கல்வி நடவடிக்கைகளில் சில பின்னடைவுகள் 2021 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டது. எதிர்காலத்தில் எங்கள் நிறுவனத்தின் பயன்பாட்டினை மிகவும் உயர்ந்த மட்டத்திற்கு கொண்டு வருவதற்கான | வளங்கள் உச்ச அளவில் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |
| (எ) | நில அளவை மற்றும் படம் வரைதல் நிறுவனத்தில் ஒரு பட்டப்படிப்பு மாணவனின் மாணவ அலகுக் கிரயத்திற்காக ஒரு மாதத்திற்கு செலவாகின்ற கல்வி மற்றும் நிருவாக செலவு ரூபா 25,426 தொகையும் மாணவர்களின் 2024 பெப்ரவரி மாத சராசரி மொத்த சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு மாணவனின் மாதாந்த சராசரி சம்பளம் ரூபா 55,927 ஆக இருந்ததனால் ஒரு மாணவனுக்கான மாதாந்த கிரயம் ரூபா 81,353 என அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க நான்கு ஆண்டு பட்டப்படிப்பிற்காக (48 மாதங்கள்) ஒரு மாணவனுக்காக செலவு ரூபா 3,904,944 ஆகும். பயிற்சி நில அளவையாளரினைச் சேர்த்துக் கொள்ளும் போது வெற்றிடங்களை விட அதிக நபர்கள் வெளி விண்ணப்பதாரர்களாக இருப்பதனால் நில அளவைக் கல்வி பட்டதாரிகளிலும் ஏனைய பட்டதாரிகளிலும் காணப்படுகின்ற வெற்றிடங்களின் அடிப்படையில் 90 சதவீதமானவர்கள் திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படுகின்றார்கள். இந்நிறுவனம் 1990 ஆம் ஆண்டின் போது பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தின் போது நில அளவைக் கல்வி தொடர்பாக ஏனைய பல்கலைக்கழகங்களில் பட்டம் வழங்கப்படாதிருந்தும் தற்பொழுது சப்ரகமுவ பல்கலைக்கழகம் மற்றும் | நில அளவை அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் எங்கள் நிறுவனத்தின் சேவைக்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட அனைத்து பயிற்சி நில அளவைாளர்களுக்குமாக 04 ஆண்டுகள் நில அளைவைக் கல்வி தொடர்பான ஒரு பட்டத்தினை பெற்றுக்கொள்ள வேண்டியதாவது பட்டதாரியினால் பெற்றுக்கொண்ட பட்டமானது நில அளவை கல்வி தொடர்பற்ற ஒரு பட்டமாக இருக்கின்ற சந்தர்ப்பத்தில் மாத்திரமாகும். அது நில அளவை கல்வி பட்டதாரிகளை சேர்த்துக்கொள்ளும் போது நில அளவை கல்வி பட்டத்தை பயிலுகின்ற 09 நபர்களுக்கு ஏனைய பட்டத்தை பயிலும் ஒரு நபர் என்பதாகும். அதற்கிணங்க நில அளவை கல்வி பட்டத்துடன் சேர்த்துக்கொள்ளப்படுகின்ற சப்ரகமுவ மற்றும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக உத்தியோகத்தர்களுக்கு இப்பட்டம் அத்தியவசியமற்றதுடன் அந்த உத்தியோகத்தர்களுக்கு 06 மாத புரிந்துணர்வினை ஏற்படுத்தும் கற்கை நெறி நடாத்தப்படுகின்றது. நில அளவை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நில அளவை | நில அளவை கல்வி பட்டதாரிகளை உருவாக்குகின்ற பின்னணியில் இன்னும் இந்த பட்ட கற்கை நெறியை நடாத்துவது தொடர்பாக மீண்டும் கவனித்து பார்க்க வேண்டியுள்ளது. |

கொத்தலாவள பாதுகாப்பு பல்கலைக்கழகம் நில அளவைக் கல்விப் பட்டதாரிகளை உருவாக்குகின்ற பின்னணியில் இன்னும் இவ்வாறு அதிக அளவான தொகையை செலவு செய்து இப்பட்டக் கற்கை நெறியை நடாத்துவது தொடர்பாக மீண்டும் ஒரு தடவை கவனித்துப் பார்க்க வேண்டிய ஒரு விடயம் என்பது கணக்காய்வின் கருத்தாகும்.

கலவ்விப் பட்டம் இல்லாத ஒரு பட்டத்தாரிக்கு எங்கள் திணைக்களத்திற்க கட்டுப்படுவதற்கு வழங்கப்பட்டுள்ள ‘‘நில அளவை கல்வி பட்டம் இருத்தல் வேண்டும்.’’ என்ற தகமை காரணமாக அந்த உத்தியோகத்தர்கள் மாத்திரம் 04 ஆண்டுகள் நில அளவை கல்வி பட்டத்தினை எங்கள் நிறுவனத்தில் பயில வேண்டும். இந்த உத்தியோகத்தர்கள் பல்வேறு பாடங்களினூடாக தொழில்நுட்ப அறிவோடு ஆயுதம் ஏந்திய பட்டதாரிகளாகக் கருதி திணைக்களத்தின் தேவைப்பாடாக சேரத்துக் கொள்ளப்படுகின்ற உத்தியோகத்தர்களாக கருதப்படுகின்றனர்.

## 4. மனிதவளங்கள் முகாமைத்துவம

### 4.1 இணைத்துக் கொள்ளப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணியினர்

| சேவை வகை | அங்கீகரித்தது | உள்ளபடியானது | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|
| சிரேஷ்டம் | 1144 | 934 | 210 | 0 |
| மூன்றாம் | 83 | 21 | 62 | 0 |
| இரண்டாம் | 1222 | 980 | 242 | 0 |
| ஆரம்பம் | 4891 | 3107 | 1784 | 0 |
| அமையம் | 0 | 0 | 0 | 0 |
| தற்காலிகம்(பல்நோக்கு) | 0 | 26 | 0 | 26 |
| ஒப்பந்தம் | 0 | 0 | 0 | 0 |
| மொத்தம் | 7,340 | 5,068 | 2,298 | 26 |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ஒட்டுமொத்த ஆளணி வெற்றிடம் 31 சதவீதமாக காணப்பட்டிருந்தும் வரைபு செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் வருடாந்த நில அளவை இலக்கு 113 சதவீத செயல்முன்னேற்றத்தினைப் பெற்றுக்கொண்டுள்ளதனால் வருடாந்த நில அளவை இலக்குகளையும் அங்கீகரித்த ஆளணியினையும் மீண்டும் திருத்தம் செய்ய வேண்டும் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | இத்திணைக்களத்திற்கு வெற்றிடமாக 2298 பதவிகள் காணப்பட்டதனால் உள்ளபடியான ஆளணிப் பதவி 5042 ஆகும். அங்கீகரித்த ஒட்டுமொத்த ஆளணியுடன் ஒப்பிடுகையில் 31 சதவீதமாகும். ஆளணியினரின் அர்ப்பணிப்புடன் எதிர்பார்த்த வருடாந்த நில அளவை இலக்குகளை மீறி 113 சதவீத செயல்முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டுள்ளது என அவதானிக்கிறேன். செயல்முன்னேற்றத்தினை சதவீதமாகக் காட்டுதல் இடம்பெறுவதாவது நில அளவையாளர் சேவையின் மற்றும் படம் வரைதல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் போன்ற வெளிக்கள கடமையை நிறைவேற்றுக்கின்ற உத்தியோகத்தர்களுக்காகவாகும். | வெற்றிடமான பதவிகளுக்கு சேர்த்துக்கொள்ளல் அல்லது அங்கீகரித்த ஆளணியினரை திருத்தம் செய்ய வேண்டியதுடன் வருடாந்த நில அளவை இலக்கினையும் திருத்தம் செய்தல் வேண்டும். |
| (ஆ) | நில அளவை மற்றும் படம் வரைதல் நிறுவனத்தின் பவியியல் பிரிவின் ஆளணி தகவல்களின் பிரகாரம் அங்கீகரித்த நில அளவை உதவியாளர் எண்ணிக்கை 42 ஆக இருந்ததுடன் உள்ளபடியான ஆளணியினர் 60 ஆகும். அதற்கிணங்க மிகை 18 ஆக இருந்ததுடன் இந்த மிகையானது புவியியல் பிரிவின் செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்படவில்லை என மேலும் அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு ஐய வினாவின் மூலம் காட்டப்பட்டுள்ள விடயங்கள் சரியானதாகும். புவியியல் பிரிவின் மூலம் தொடர்புபடுத்தப்பட்டுள்ள 66/நிலஅளவை/2024 ஆம் இலக்க 2024 மார்ச் 26 ஆந் திகதிய கடித்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள வேண்டுதல்களுக்கு இணங்க அப்பிரிவிற்காக 11 நில அளவை வெளிக்கள உதவியாளர்களை இணைத்துக்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | ஆளணியினர் சரியாக இணைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும். |